# கப்பல் பயணிகள் சொந்த இடங்களுக்கு திரும்புவர்

விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 22 இதழ் 215
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 07-09 1995

(யாழ்ப்பாணம்)

'ஐரிஸ்மோனா' பயணிகள் அனைவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இதற்கான ஒழுங்குகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுவருகிறது.

மேற்படி பயணிகள் நேற்று அதிகாலை யாழ். நகருக்கு அழைத்துவரப்பட்டு யாழ். ஜோன் பொஸ்கோ மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 121 பயணிகளில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர்.

நேற்று பிற்பகல் 3-30 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பயணிகளைப் பார்வையிட்டனர். இவர்களை சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் தற்போது செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். 170-வி-சி

## மாலுமிகளை விடுவிக்க புலிகள் நிபந்தனை

### 2 பெண் கடற்புலிகளை விடுவிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

'ஐரிஸ் மோனா' கப்பலிலிருந்து விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட எட்டு மாலுமிகளை விடுதலை செய்வதற்கு விடுதலைப்புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

அண்மையில் காங்கேசன்துறை துறைமுகத்தில்வைத்து எடித்தாரா கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு பெண்

[6ம் பக்கம் பார்க்க]

# ★ முல்லைத்தீவு கடலில் தகர்க்கப்பட்ட டோராவிலிருந்து 4 பீரங்கிகளும் கனரக ஆயுதம், ராடரும் மீட்பு

## நான்கு 50கலிபர் துப்பாக்கிகளும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கடலில் கடற்புலிகள் கடந்த29-ம் திகதி இரு அதிவேக டோரா பீரங்கிப் படகுகளை அழித்த வெற்றிகரத் தாக்குதலில் அவற்றிலிருந்து நான்கு பீரங்கிகள் உட்பட பல கனரக ஆயுதங்களையும் அவற்றிற்கான பெருமளவு எறிகணைகளையும் நவீனராடர் சாதனங்களையும் கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு; அரசு பரிசீலிக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுடன் சரியான வழியில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முன்வந்தால் அது பற்றி பரிசீலனை செய்ய அரச தயாராகவுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கூறியுள்ளார்.

(5ம்பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் அனைவரும் உடன் ராஜினமா செய்ய வேண்டும்

### அரச எம். பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

அமைச்சரவை செயல் திறமையற்ற முறையில் ஆட்சி செய்வதால் அமைச்சர்கள் அனைவரும் ராஜினமா செய்யவேண்டுமென ஆளும் கட்சியான பொ. ச. மு. எம் பிக்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போரை நிறுத்துவதற்காக ஜனாதிபதி சந்திரிகா முன் வைத்துள்ள தீர்வுத்திட்டத்தை சிரேஷ்ட அமைச்சர்கள் மூவர் எதிர்த்துவருவதையடுத்து ஆளும் கட்சியினுள் இப்பிரச்னை எழுந்துள்ளது.

சிறந்த சிந்தனையுடன் கூடிய வளர்ச்சித் திட்டமொன்றை தாம் வகுத்திருப்பதாக நேற்று நடந்த வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் கூறிய போது அக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் அதனை ஏற்காது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதனால் ஆத்திரமடைந்த உறுப்பினர்கள் அமைச்சர்கள் தங்கள் பணிகளை சரிவரச்

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் பார்சல் குண்டு; பொலிசாரால் கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த இரண்டு கிலோ நிறையுடைய பார்சல் குண்டு தகுந்த நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு வெடிக்க வைக்

(5ம் பக்கம் பார்க்க)

## 'லக்பிம' பத்திரிகை காரியாலயம் முற்றுகை

(கொழும்பு)

'லக்பிம' சிங்களப் பத்திரிகை அலுவலகத்தில் நேற்று எவ்வித முன் அறிவித்தலுமின்றி குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பொலிசார் பலர் முற்றுகையிட்டதாக பி.பி.சி. சிங்களச்சேவை தெரிவித்தது.

(5ம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட 'ஐரிஸ் மோனா' பயணிகள் ஜோன்பொஸ்கோ பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம். படங்கள்: 'தேவா'

## வரி விளம்பரம்

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் IC, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்: அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ் 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5524)

## வீதி திருத்தம்

(தாளையடி)

மிக மோசமாகப் பழுதடைந்திருந்து போக்குவரதது செய்யமுடியாத நிலையிலிருந்த தாளையடி-புதுக்காடு வீதியில் மருதன்கேணி பாலத்தை அண்டிய பகுதியும், மருதன்கேணி-பருத்தித்துறை வீதியில் 19ம் மைல் கல்லில் இருந்து ஒருமைல் நீளமான வீதியும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 163 சி

நவாலிதாக்குதல்

## மேலும்ஒருவர் மரணம்

(அமியாலே)

நவாலி சென் - பீற்றர்ஸ் தேவாலயம் மீது கடந்த ஜூலை 9ந் திகதி நடாத்திய புக்காரா விமானத்தாக்குதலில் படுகாயமடைந்து யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த புவேந்திரன் நிமலேந்திரன் [வயது 18] என்பவர் நேற்று முன்தினம் மரணமானுர். 59

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

இராணுவ அனர்த்தங்களினுல் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களைக் குடியேற்றுவதற்காக வரணி, இயற்றுலைப் பகுதியில் நடைபெறும் ஆயிரம் குடிசைகள் அமைக்கும் சிரமதானப் பணியை வரணி, இயற்றுலை நலன்புரி நிலையமும் கூட்டாக இணைந்து சிரமதானப் பணி மூலம் தமது பங்களிப்பை வழங்கினர் இச்சிரமதானப் பணி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. 154-சி

## பயிலுநர்கள் தேவை

பிரபல கணக்காய்வு நிறுவனம் ஒன்றிற்கு பயிலுனர்கள் தேவைப்படுகின்றுர்கள். இவர்கள் க.பொ.த. உயர்தர வர்த்தகப்பிரிவில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கணக்கியல் உட்பட 03 பாடங்களாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தகுதியானவர்கள் 15-09-95ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

விளம்பர எண்: A-5265

மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(ஏ-5265)

## இதய ஜோதியான இமய ஜோதி

சுவாமி சிவானந்த மகரிஷி மகராஸ் அவர்களின் 108 ஆவது ஜெயந்தி விழா அவரின் அடியார்களால் உலகெங்கும் நாளை 08-09-1995ந் திகதி கொண்டாடப்படுகிறது. யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபம் நல்லூரிலும் பூஜை, பிரார்த்தனை, பஜனை, சொற்பொழிவுகளுடன் அன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை கொண்டாடப்படும்.

சாமான்யமாய் திருநெல்வேலி மாவட்டத்தில் பத்தமடை குப்புசாமியாய் பிறந்த குழந்தை தன் ஆன்மாவை வளர்த்து தெய்வீக அம்சம் பெற்று சுவாமி சிவானந்த சரஸ்வதியாக உலகுக்கு ஓர் ஞான தீபமாக ஒளிர்ந்தார்.

தொண்டு செய், அன்பு செய், தாராளமாய் வழங்கு, உன்னைப் புனிதப்படுத்திக் கொள், தியானம் செய், உன்னையே அறிந்து கொள்ள முயற்சி செய் இதுதான் சாதாரண மனித வாழ்க்கையை தெய்வீக வாழ்க்கையாக மாற்றும் மார்க்கம்.

இப்படி வாழ வழிவகுத்துத் தந்தவர் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை நிறுவிய தவமுனிவர் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள்.

ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையே தெய்வீக வாழ்க்கை. தன்னை உணர்ந்து கொள்ளும் அறிவே உயர்ந்த ஞானம். தெய்வ நம்பிக்கையே வாழ்க்கைக்கு ஊன்று கோல் என்றெல்லாம் விளக்கத் தன் வாழ்க்கையே உதாரணமாகக் காட்டி வாழ்ந்த உத்தமச்செம்மல் ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி அவர்கள்.

இறந்த காலம் இன்று கனவு, நிகழ்காலம் நாளை கனவு நாளையோ அதன் மறுநாளின் இறந்தகாலம். இப்படி இருக்க கனவுப்பொருட்களுக்கு ஆசைப்பட்டு கடமையை மறந்துவிடாதே. இப்படி எல்லாம் உபதேசங்கள் வழங்கி உலக மக்களைவரையும் ஒழுக்க நெறியில் செல்ல எளிய வழியைக் காட்டியவர் சுவாமி சிவானந்தர்

அமைதியைத் தேடித் திரியும் மனித இனத்திற்கு, அந்த பேரின்பத்தை அடையும் மார்க்கத்தை காட்டி புண்ணிய புருஷர் சுவாமி சிவானந்தருக்கு நாம் எப்படி நன்றி செலுத்த முடியும். அவர் காட்டிய நல்ல வழியைப் பற்றி நடப்பதே அந்த நன்றிக் கடன்.

சி. கனகரத்தினம்
[தலைவர், யாழ் திவ்ய ஜீவன சங்கம்]

## நெல்லியடியிலும்...

# தமிழீழ வைப்பகம்

## 14-09-95 முதல்

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

தன் பணியைத் தொடங்குகிறது

"உங்களிற்காகவே உருவான வைப்பகம்
தந்திடும் பணியில் தன்னிறைவடைவீர்"

★ நடைமுறைக் கணக்கு ★ தேட்ட (சேமிப்பு)க் கணக்கு
★ நிலையான வைப்புக் கணக்கு ★ பிள்ளைகளின் தேட்டக்கணக்கு
★ வெளிவரவு நிலையான வைப்புக்கணக்கு

### இத்தனை திட்டங்களும் உங்களுக்காகவே!

தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்யுங்கள்...

★ உங்கள் எதிர்காலம் வளமாக மாறும்
★ நாடும் வீடும் பொருண்மிய வலுப்பெறும்
★ தமிழரின் வியர்வைத்தேட்டத்தில் தாயகம் அழகுத் தோட்டமாகும்

"உங்களின் உயர்வே
எங்களின் குறிக்கோள்"

## தமிழீழ வைப்பகம்,

பிரதானசாலை,
நெல்லியடி.

"தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்"

(எ-5264)

# போலியோ பற்றி

## உலக சுகாதார நிறுவனம்

1988க்குப் பின் போலியோ (இளம்பிள்ளை வாதம்) நோயின் தாக்குதலுக்கு இலக்கானேர் தொகை 82 வீதத்தால் குறைவுற்று இருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் உதவி இயக்குநர் நாயகம் டாக்டர் ராவ்வ் ஹெண்டர்சன் தெரிவித்துள்ளார்.

போலியோவை உலகில் இருந்து ஒழித்துவிட இந் நிறுவனம் அந்த ஆண்டில் எடுத்த தீர்மானத்தை அடுத்து, 1994இல் 6,241 பேர் மட்டுமே இதன் தாக்கத்துக்கு உட்பட்டனர் எனவும், 1988 இல் கணக்கப்பட்ட 35,255 போலியோ நோயாளர்களுடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கை சொற்பமானதே எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்நிறுவனம் வெளியிட்டுள்ள '2000 ஆண்டில் யாவருக்கும் ஆரோக்கியம்' என்ற அறிக்கையிலேயே திரு. ராவ்வ் ஹெண்டர்சன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவரது கூற்றின்படி உலகில் இதுவரை 145 நாடுகள் போலியோவின் பிடியிலிருந்து முற்றிலும் விடுபட்டிருக்கின்றன எனவும், 2000 ஆண்டில் இந்நோய் முழு உலகிலிருந்தும் ஒழித்துக்கட்டப்படும் எனவும் அறியவருகின்றது.

இந்திய உப கண்டத்திலும், மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவிலும் போலியோ ஒழிப்பு நடவடிக்கை பரந்த அளவில் தீவிரமாகச் செயற்படுத்தப்படவேண்டும். உலகின் 75 வீதமான போலியோ நோயாளிகள் இந்திய உப கண்டத்தில் மட்டும் உருவாகின்றனர் சில நாடுகளில் தாக்கப்படும் நோயாளர் பற்றிய விபரங்கள் பேணப்படுவதில்லை என்ற தகவலையும் அவர் தருகின்றுர்.

"40 வருடங்களுக்கு முன் போலியோவைக் கண்டு உலகமே பயந்தது. இன்றே கைத்தொழில் மயமான நாடுகளில் இந்நோய் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த தடுப்பு மருந்துகளும், பெரிய அளவில் நடத்தப்பட்ட நோய்த் தடுப்புத் திட்டங்களுமே இந்த வெற்றிக்கான காரணமாகும்" இவ்வாறு இந்நிறுவனத்தின் இயக்குநர் நாயகம் டாக்டர் ஹிரோஷி நகாஜிமா கூறுகின்றுர்.

இந்த நாட்டவர்கள் போலியோ என்றுல் என்ன? என்று கேட்கும் அளவுக்கு அந்த நோய் அங்கெல்லாம் அற்றுப்போய்விட்டது. ஆனுலும் போலியோ விரைவில் தொற்றிவிடக்கூடிய அபாயகரமான நோய் என்பதால், ஒவ்வொரு நாடும் நோய்த் தடுப்பு இயக்கங்களை முழு வெற்றி அடையும்வரை தொடரவேண்டும். இதன் மூலமே முழுஉலகையும் இதன் பிடியிலிருந்து விடுவிக்கமுடியும் என அவர் மேலும் கூறுகின்றுர். தீ

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—09—07**

வியாழன் இரவு

| | |
|---|---|
| 8-02 | சொல்லுங்கள் பார்க்கலாம் |
| 8-10 | நோய் தீர்க்கும் மூலிகைகள் |
| 8-20 | உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் "துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டம்" உரைச்சித்திரம் |
| 8-30 | செய்திகள் |
| 8-30 | மொழியும் வாழ்வும் |
| 8-50 | எங்களின் தேசம் |

**1995—09—08**

வெள்ளி காலை

| | |
|---|---|
| 7-02 | மாவீரவணக்கம் |
| 7-15 | மணியாரம் |
| 7-30 | செய்திகள் |
| 7-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 7-45 | தாயகப்பாடல்கள் |

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—09— 07**

வியாழன் மாலை

| | |
|---|---|
| 5-01 | சிந்தனைச் சிதறல் |
| 5-02 | எழுச்சிகீதம் |
| 5-10 | புதியவை |
| 5-15 | மழலைகளுக்காக |
| 5-30 | இசையும் கதையும் |
| 6-00 | சிந்தனைக்குச் சில விஞடிகள் |
| 6-02 | பொன்விளையும் பூமி |
| 6-10 | செய்திகள் |
| 6-15 | விளையாட்டுச் செய்திகள் |
| 6-20 | கேள்வி - பதில் விளையாட்டுத் தொடர் பானவை |

### மணிவாக்கு

எல்லாவற்றிலும் முதற் பங்கு ஏழை எளியவர்களுக்குத் தான் தரப்படவேண்டும். அவ்விதம் தந்தது போக எஞ்சியிருப்பதைப் பெறவே நமக்கு உரிமை உண்டு.

- சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

### தலைவிதி

ஜனாதிபதி சந்திரிகா அரசின் தலைவிதியை தீர்மானிக்கும் வகையில் பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தீர்வுத் திட்ட யோசனைகள் பற்றிய எதிர்ப்பு வேகமடைந்து பொதுசன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே விரிசல்கள் ஏற்படக்கூடிய வகையில் முணு முணுப்புகள் கேட்கிறது.

மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்காலத்திலிருந்தது போல் தலைதூக்கி பலரையும் அச்சுறுத்தும் வகையில் பூதாகாரமாக வளர்ந்து வருகிறது. வாவிச் சடலங்களும் மனித உரிமை மீறல்களும் வேண்டுமென்றே அரசினால் பூதாகாரமாக்கப்படுவது போலவும் தோன்றுகிறது. இவ்வளவு காலமும் ஐ. தே. கட்சி ஆதரவாளர்களைக் கொண்டு இயங்கி வந்த விசேட அதிரடிப் பிரிவை சந்திரிகா அரசு தன் கைக்குள் கொண்டு வருவதற்காகவும் தனக்கு ஆதரவான அதிகாரிகளை அதற்குள் கொண்டு வரவும் செய்யும் ஏற்பாடு போன்றும் உள்ளது. ஆனால் இந்த இழுபறிக்குள் அகப்பட்டு உயிர் இழப்பது தமிழ் இளைஞர்கள் தான். இருந்தபோதும் இவ்விவகாரமும் சந்திரிகாவுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

பிரபல மனித உரிமை வாதியான பாடகி சுனில் அபேசேகரா விடுதலைப்புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிப்பது என்பதான கோஷங்கள் அனைத்தும் நடைமுறையில் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதில் தான் முடிகிறது என்று விமர்சித்துள்ளார். தமிழ் இளைஞர்கள் காணாமல் போகும் விடயத்தில் சிங்களவர் மத்தியில் உள்ள மனித உரிமைவாதிகள் அக்கறை காட்டாததையும் அவர் சாடியுள்ளார். அரசுக்கெதிரான உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமைவாதிகளின் கண்டனங்களும் அதிகரித்துக் கொண்டுவருகிறது.

இதற்கிடையில் கடற்படையினர் தங்களுக்கு விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய அதிநவீன கப்பல்களையும் படகுகளையும் பெற்றுத்தருமாறு நிர்ப்பந்திக்கிறதோடு அவ்விதம் செய்யாவிடின் இராஜினாமாச் செய்யப்போவதாகவும் பயமுறுத்துகிறார்கள்.

ஐரிஸ் மோனாக்கப்பல் விவகாரம் சூடுபிடித்து அரசு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் உள்ளது. பிரதி அமைச்சர், இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா ஆகியோர் நேரத்துக்கு ஒரு அறிக்கையை விடுகிறார்கள். இது அரசின் இக்கட்டான நிலையை வெளிக்காட்டுகிறது.

மேலும் வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவது சம்பந்தமாகவும் அரசு ஒரு நிலையான தீர்க்கமான முடிவை எடுக்க முடியாது தத்தளிக்கிறது. இராணுவம் வடக்கில் பாரிய தாக்குதலை நடத்தினால் புலிகள் கிழக்கில் பாரிய தாக்குதல் நடத்துவர் என்றும் அது கிழக்கின் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யுமென்றும் கிழக்குப் பிராந்தியப் படை அதிகாரிகள் கருதுகின்றனர். அதுவுமல்லாமல் வடக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் தற்போது கடற்படையினர் முடக்கப்பட்டுள்ள நிலையில் இங்கு பங்கு பற்றவுள்ள 35,000 படையினருக்கான விநியோகம் பெரும்பாதிப்புக்குள்ளாகும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தலையை போட்டுப் பிய்த்துக் கொண்டிருக்கின்றன.

ஒருவாரகாலப்பகுதியில் மூன்று அதிவேக டோரூப்படகுகளை கடற்புலிகள் தாக்கி அழித்தமை சிறிலங்கா கடற்படைக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடற்படையின் நடவடிக்கைகள் இதனால் பெருமளவுக்கு முடக்கப்பட்டதோடு மாரிகாலத்துக்கு முன்னர் குடாநாட்டின் மீது இராணுவம் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டிருந்த பாரிய இராணுவ நடவடிக்கை குறித்தும் மிகப் பெரிய கேள்விக்குறியை எழுப்பியுள்ளது.

ஆகவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் மேற்கூறிய சகல விடயங்களும் உச்ச குழப்ப நிலைக்கு வந்து சந்திரிகா அரசின் தலைவிதியையே நிர்ணயிக்கக் கூடிய வகையில் விசுவரூபம் எடுத்துள்ளன.

# வடபகுதி மீதான தாக்குதலால் முழு இலங்கையும் போர்க்களமாகும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மீண்டும் படை நடவடிக்கையை ஆரம்பிப்பது கிழக்கில் நிலைமையை மோசமாக்கி, இலங்கை முழுவதையும் போர்க்களமாகச் செய்யும் முயற்சிக்குப் புலிகளைத் தூண்டிவிடும் என இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் கூறியுள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி தெரிவித்துள்ளது.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர், கிழக்கைப் புலிகள் பெருமெடுப்பில் தாக்க முனைவார்கள் அல்லது வடக்கில் பல பகுதிகளைப் படையினர் கைப்பற்றினால் அங்கிருந்து பெருமளவு புலிகள் கிழக்கே வந்துவிடுவர்.

இதன் மூலம் கிழக்கில் மீண்டும் பெரும் யுத்தம் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது. இவ்வாறான தாக்குதல் மூலம், புலிகள் முழு இலங்கையையும் போர்க்களமாக்கும் சாத்தியம் இருப்பதாகவும் அந்த இராணுவ அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனராம். சி

# வடபகுதி தாக்குதல் குறித்து இராணுவத்தில் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யாழ். குடாவில் பாரிய தாக்குதலை நடாத்துவது குறித்து இராணுவ தலைமைப் பீடத்தில் கருத்து வேறுபாடு நிலவுவதாக ஏ எவ்.பி செய்தி தெரிவித்துள்ளது.

யாழ். குடாவில் உடனடியாக பாரிய தாக்குதலை நடாத்தி விடுதலைப் புலிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்துவதுடன் அவர்கள் வசமுள்ள பகுதிகளை கைப்பற்ற வேண்டுமென சில மூத்த அதிகாரிகள் விரும்புகின்றனர்.

வேறு சில அதிகாரிகளோ வடக்கில் புலிகள் இராணுவ முகாம் ஒன்றின் மீது பெருமெடுப்பில் தாக்குதலை நடாத்தும் போது அதனை முறியடித்து அதன் மூலம் புலிகளுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறிவருகின்றனர்.

இன்னொரு தரப்பு அதிகாரிகளோ; மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையையே மேற்கொள்ள வேண்டுமெனவும் இல்லாவிடில் படையினருக்கு பாரிய சேதம் ஏற்படுமெனவும் கூறி வருகின்றனராம். சி

## ● ஏழு மாதங்களில்

## 66 தடவைகள் நாட்டில் ரயில்கள் தடம்புரண்டன

(கொழும்பு)

இவ்வருடத்தின் முதல் 7 மாதங்களுக்குள், 66 தடவைகள் ரயில் வண்டிகள் தடம் புரண்டுள்ளன. இதற்கு முக்கிய காரணம், ரயில் பாதைகள் சீரில்லாமல் இருப்பதே''

இவ்வாறு இது சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழு, தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தற்போதைய ரயில் பாதைகள் மிகவும் பழைமை வாய்ந்தவையாக இருந்தபோதிலும் இப்பாதைகளைச் சரியாகப் பராமரிக்காததாலேயே பெருமளவு ரயில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த வரு

(5ம் பக்கம் பார்க்க)

## திடீர் விஜயம்

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் திரு. வி. ஸ்ரீகாந்தாவும் திணைக்கள உயரதிகாரிகள் கொண்ட குழுவினரும் கடந்த வெள்ளிக்கிழமை காலை திடீர் விஜயம் மேற்கொண்டனர். 160

# இராசி பலன்

07-09-1995

வியாழக்கிழமை

[தமிழுக்கு ஆவணி-22]

திரயோதசி பி. ப 1. 00 வரை திருவோணம் மு. ப 8. 23 வரை, சித்தயோகம், இராகு காலம் பி. ப 1. 30 முதல் 3. 04 வரை, சுபவேளை காலை 7. 34 முதல் 9; 04 வரை.

மேஷம்: புத்தித் திறமை, தொழில் சிறப்பு, பணவரவு.

இடபம்: மனக்கிலேசம், காரியசிரமம், அலைச்சல்.

மிதுனம்: சத்துருபகை, மனச்சஞ்சலம், கடன்படல்.

கடகம்: புதியமுதலீடு, தொழில் லாபம். சகோதர உதவி.

சிங்கம்: புத்திரர் நன்மை, மேலான நிலை, பயணம்,.

கன்னி: கடமை தவறுதல், வேண்டாத தொல்லை, யோசனை.

துலாம்: துர்வார்த்தை, குடும்பசங்கடம், காரியதடை.

விருச்சிகம்: நினைத்தது நிறைவேறல், பணவரவு, வாக்குவன்மை.

தனுசு: கௌரவகுறைவு, மனச் சங்கடம், ஏமாற்றம்.

மகரம்: பெரியோர் சகாயம், முயற்சிபலிதம், பொதுப் பணி.

கும்பம்: பெற்றோர் கவலை, தொழில் நஷ்டம், உடல் அசதி.

மீனம்: வைராக்கியம், குடும்ப சுகம், எதிர்பாராத நன்மை.

— ஜோஸ்யர்

## மந்திரி ரத்வத்தை மண்குதிரை தளுவத்தை

ஆங்கிலேயர் ஆட்சி இங்கே அகன்று போனது<br>
ஆண்டதமிழ் சிங்களர்க்கும் அடிமையானது!<br>
சேர்ந்து வாழ்வம் என்று சொல்லிச்செக்கில்<br>
பூட்டினான்!<br>
சிங்களவன் கண்டதெல்லாம் சட்டமாக்கினான்!

காடழித்து களனியாக்கி வாழ்ந்த மக்களைக்<br>
கரும்பு செய்யப்போறேன் என்று அடித்து விரட்டினான்<br>
கல்லோயா என்று புதுப் பெயரும் சூட்டினான்;<br>
காவாலிச் சிங்களவனைக் குடியுமேற்றினான்!

தாரெடுத்து முதுகினிலே பட்டை தீட்டினான்!<br>
தமிழர் உரிமைதனைப் பறித்தவனே கத்தி தீட்டினான்!<br>
வாளெடுத்த சோழனவன் மாண்டு விட்டானென்றே!<br>
வாயசடிச் சிங்களவன் வாலையாட்டினான்!

தினவெடுத்த தோளுடனே தலைவன் தோன்றினான்!<br>
திமிர் பிடித்த சிங்களவன் பாடையேறினான்!<br>
போரென்றால் போரென்ற பொக்கை வாயனே!<br>
பேசாமல் பக்குவமாய் வாயை மூடினான்!

அனுருத்தரத்வத்தை ஆடை மாற்றினான்!<br>
அரசியலில் புகுந்தவனே வாய்வீரம் பேசினான்!<br>
தளுவத்தை மண்குதிரை மீதிலேறினான்!<br>
தமிழ் வீரப் புலியாற்றில் வீழ்ந்து மூழ்கினான்;

ம' ஆனந்தன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible] நூலகம்.

# இந்த நூற்றாண்டின் பிரபல திருமணம் இன்று தமிழ்நாட்டில் நடைபெறுகிறது

இந்த நூற்றாண்டில் மிகவும் ஆடம்பரமானதும்- பிரபல்யம் வாய்ந்ததது மான, தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வளர்ப்பு மகனுக்கும், உலகப்பிரசித்தி பெற்ற நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடைய பேத்திக்கும் திருமணம் இன்று 7ம் திகதி சென்னையில் நடைபெறுகின்றது.

இந்தத் திருமணத்துக்கு இந்திய ஜனாதிபதியும், பிரதமர் நரசிம்மராவும் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியும் விசேடமாக அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான திருமண அழைப்பிதழ், முதல்வர் ஜெயலலிதா. கடந்த வாரம் விசேட விமானத்தில் புதுடில்லிக்குச் சென்று வழங்கியுள்ளார்.

இத்திருமணத்துக்கு இரண்டு லட்சம் பேர் நேரடியாக அழைக்கப்பட்டுள்ளார்கள். இதில் 5 ஆயிரம் பிரமுகர்களுக்கு திருமண அழைப்பிதழ், வெள்ளித்தட்டில் வைத்து விலையுயர்ந்த வேறு பொருட்களுடன் வழங்கப்பட்டுள்ளது, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்தும் பிரபல நடிகர்கள் இத்திருமணத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு வந்துள்ளார்கள்.

மணமகன் வீட்டிலிருந்து திருமண மண்டபத்துக்குச் செல்வதற்கும், பின்பு தம்பதிகள் ஊர்வலமாகச் செல்வதற்கும் சந்தனக்கட்டையினால் விசேட வேலைப்பாடுகள் கொண்ட தேர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தேரை இழுத்துச் செல்வதற்காக அரேபியாவிலிருந்து வெள்ளை நிறக் குதிரைகள் வரவழைக்கப்பட்டுள்ளது. மணமக்கள் ஊர்வலமாக செல்லும் ஐந்து மைல் வீதிகள் நெடுகிலும்

## "தேவா"

மலர் தூவுவதற்காக 9 லொறிகளிலும் ரோஜாப் பூக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மலர் தூவுவதற்கென மூவாயிரம் சிறுவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. திருமண வைபவங்களை நேரடியாக பார்ப்பதற்கு இரண்டு லட்சம் இருக்கைகள், கல்யாண மண்டபத்தினுள் போடப்பட்டுள்ளது.

திருமணம் ஊர்வலமாக செல்லும் ஐந்து மைல் நெடுகிலும் பத்தடிக்கு ஒரு அலங்காரத்தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. முக்கிய சந்திகளில், அரண்மனைபோல் கலையம்சங்கள் கொண்ட பிரமாண்டமான மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நாள் முழுவதும் கச்சேரிகளும், நாடகங்களும் நடைபெறவுள்ளன. இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும், இந்தியாவின் மற்றைய மாநிலங்களிலிருந்தும் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டுள்ளார்கள்.

இத்திருமண விருந்தில், 8 வகையான உணவுகள் பரிமாறப்பட இருக்கின்றது- இதற்காக 3500 சமையல்காரர்களும் ஐயாயிரம் உதவியாட்களும் தயார்நிலையில் இருக்கிறார்கள். 7 ஆயிரம் ஆடுகளும், பத்தாயிரத்துக்கும் அதிகமான கோழிகளும், 3 லட்சம் முட்டைகளும் உணவாக்கப்பட இருக்கின்றன.

திருமணத்துக்கு வரும் பிரமுகர்கள், உடனடியாக தமது இடங்களுக்கு திரும்பிச் செல்வதற்காக தனியார் விமான நிறுவனங்களின் பெரிய சிறிய விமானங்களும் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்களும் தயாராக நிறுத்தப்பட்டுள்ளது. இத்திருமணம் சிறப்பாக நடைபெற்று முடிவடையும் வரை ஆயிரக்கணக்கான பொலிஸாரும் இராணுவத்தினரும் உஷார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

-வி

# தீர்வுத் திட்டத்தை தோற்கடிக்க அரசு எம்.பி.க்களும் தீவிரம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்திற்கு எதிரான உணர்வு பொ. ச. மு வினுள் தீவிரமடைந்து வருகிறது.

இத் தீர்வுத் திட்டத்திற்கு எதிராக பொ. ச. மு எம் பிக்கள் பலர் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர். இதுவரை 40 எம். பிக்கள் வரை இத் தீர்வுத்திட்டத்திற்கு எதிராக கையெழுத்திட்டுள்ளனர்.

அதிகாரப் பகிர்வு யோசனையில் பல மாற்றங்களை செய்யாவிடின் அதனை தாங்கள் ஏற்கப் போவதில்லை என இந்த எம் பிக்கள் கூறியுள்ளனர். இதையடுத்து தீர்வுத் திட்டத்தை எதிர்ப்போர் தொகை அரசுக்குள் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை நான்கிற்கும் மேற்பட்ட அமைச்சர்களும் இந்த தீர்வுத் திட்டம் குறித்து பகிரங்கமாக விமர்சனம் செய்துள்ளனர். அமைச்சரவையிலும் இது குறித்து காரசாரமான விவாதங்கள் நடைபெற்று வருகிறது எனவும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

-சி

## யாழ். செல்ல மறுத்த 18 பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு கடமைக்குச் செல்ல மறுத்த 18 பொலிசாருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜூலை 14ம் திகதி இந்த 18 பொலிசாரையும் யாழ்ப்பாணத்தில் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்கு கடமைக்குச் செல்லுமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் மியூடர் குணரட்ண பணிப்புரை வழங்கியிருந்தார்.

ஆனால் இந்த 18 பொலிசாரும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி யாழ்ப்பாணம் செல்ல மறுத்துவிட்டனராம். இதனால் றிசேர்வ் பொலிஸ் சப்இன்ஸ்பெக் ஒருவர் உட்பட 17 றிசேர்வ் பொலிசார் மீது தற்போது வழக்குத்தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

ர-இ-ரி

# மாரிகாலத்தில் போர்மூளலாம்; இரு தரப்பும் தயார் நிலையில்

(கொழும்பு)

மழை காலத்தில் வடக்கில் பாரிய தாக்குதலை நடாத்துவதற்காக, அரச படையினரும், விடுதலைப் புலிகளும் காத்திருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

மாரிகாலச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளப் புலிகள் திட்டமிட்டு வருவதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம். இதேபோன்று வடக்கில் மாரிகாலத்தில் பாரிய தாக்குதலை நடாத்தப் படையினரும் திட்டமிட்டுள்ளனராம்.

புலிகள் எதிர்பாராத ஒரு இடத்தில் எதிர்தபாரா திடீர் தாக்குதலைத் தொடுத்து, படையினருக்குப் பாரிய அழிவை ஏற்படுத்தி விடுவார்கள் எனப் படையினர் அச்சம் அடைந்துள்ளனர்.

எனினும் எதிர்வரும் மாரி காலத்தில் இரு தரப்பும் பாரிய யுத்தத்தில் ஈடுபடும் சாத்தியம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. மாரிகால மோதலுக்காக, இரு தரப்பும் சகல ஆயத்தங்களையும் செய்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சி

## நாளை வெளிவரும்

முன்னாள் காவலூர் நாடாளுமன்ற அங்கத்தவர் திரு. நவரத்தினம் அவர்கள் எழுதிய புத்தகத்திலிருந்து எடுத்துப் பிரசுரமாகும்பகுதிகளின் தொடர்ச்சி நாளை ஈழநாட்டில் வெளிவரும்.

— ஆசிரியர்

## பாடசாலை இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆரம்பமாகி வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுகின்றது. மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## ஏழு மாதங்களில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் முதல் 7 மாதங்களுக்குள் 66 தடவைகள் ரயில் வண்டிகள் தடம் புரண்டதால் ரயில்வே திணைக்களத்திற்குப் பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அக்குழு தெரிவித்துள்ளது. வி சி

# ★ 'ஐரிஸ் மோனா' விவகாரம்: முல்லைத்தீவு கடற்பரப்பில் பெரும் மோதல் வெடிக்கலாம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற் பகுதியில் எந்நேரத்திலும் கடும் மோதல் வெடிக்கும் அபாயம் எழுந்துள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'ஐரிஸ் மோனா' கப்பலை நடுக்கடலில் இருந்து நகர்த்த விடுதலைப் புலிகள் முற்பட்டால், அதனைக் குண்டு வீசி அழிக்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் அக்கப்பலைப் பாதுகாப்பாக நகர்த்திச் செல்லப் புலிகள் முற்படுகின்றனராம்.

இந்நிலையில் இரு தரப்பும் தமது நோக்கங்களை நிறைவேற்றத் தயாராகி வருவதால், முல்லைத்தீவுக் கடற்பரப்பில் எவ்வேளையிலும் பெரும் மோதல் வெடிக்கும் அபாயம் இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

எனினும் இரு தரப்பினருக்கும் இடையில் இவ்விடயம் தொடர்பாகச் சமரசம் செய்து மோதலைத் தவிர்க்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சி

## போர்க்கால நேரமிது

அண்ணையரே தம்பியரே அருமை அக்கா தங்கையரே
போர்க்காலம் இதுவல்லோ? புறப்படுதல் வேண்டாமோ?
படுத்துறங்கி நாளும் பலகாலமாகிப்போச்சு
துடுக்கோடு நீர்விரையும் போர்க்கால நேரமாச்சு

எத்தனை முறைகள் பேசி அலுத்தது
எத்தனை உயிர்களை பேச்சு முடித்தது
எத்தனை உடல்களை ஷெல்கள் சிதைத்தது
இப்படி எத்தனை பிஞ்சுகள் போனது

இனியும் நாமென்ன ஏங்கிச் சாவதா?
இல்லை; எழுந்தினி நாடு அமைப்போம்
இணைந்து புலிகளாய் நிமிர்ந்து வாழ்வோம்
இந்த மண்ணினை நாங்கள் ஆளுவோம்

நி. கண்ணன்

# கொழும்பு வந்த இந்தியக் கப்பலில் குண்டு துளைத்த பாரிய துவாரம்

(கொழும்பு)

இந்தியாவின் முக்கிய வர்த்தக துறைமுகமான கல்கத்தாவிலிருந்து கொழும்பிற்கு வந்த சரக்குக் கப்பலில் குண்டு துளைக்கப்பட்ட பெரிய துவாரம் ஒன்று இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளே இதற்கு காரணமாயிருக்க வேண்டுமெனவும் விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலேயே இந்தக் கப்பலில் பாரிய துவாரம் ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கல்கத்தாவிலிருந்து வந்த இக் கப்பலில் ஏற்பட்டுள்ள பாரிய துவாரம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து சீர் செய்யப்பட்டு வருகிறது.

குண்டுத் தாக்குதல் அல்லது ஆயுதத் தாக்குதல் மூலமே இந்த துவாரம் ஏற்பட்டிருப்பதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதையடுத்து இலங்கை வரும் வெளிநாட்டு கப்பல்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -சி

காயமடைந்தவர்களுக்கு

# றோட்டரிக் கழகம் குருதிக் கொடை

(நெல்லியடி)

வடமாரட்சி கிழக்கு நடுக்குடத்தனைப்பகுதியில் சுப்பர் சொனிக் தாக்குதலில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பருத்தித்துறை றோட்டரிக் கழகத்தைச் சேர்ந்த நால்வர் குருதிக் கொடை செய்துள்ளனர்.

இவ்வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்ட குருதிப் பற்றாக்குறை பற்றி பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, பருத்தித்துறை றோட்டரிக்கழகத்தினருக்கு தகவல் கொடுத்ததையடுத்து றோட்டரிக்கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீபதி தலைமையில் வைத்தியசாலைக்கு விரைந்து வந்த நால்வர் குருதிக் கொடையைச்செய்துள்ளனர். 160

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம்

(கண்டி)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று முன்தினம் வீதிகளில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதினால் கண்டி - பேராதனை வீதியில், வாகனப் போக்குவரத்து பல மணி நேரம் தடைப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

"றுக்கிங்கில்" ஈடுபட்டு இடைநிறுத்தப்பட்ட 7மாணவர்களும் இதில் பங்குபற்றியதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

வியாழக்கிழமையிலிருந்து தாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட இருப்பதாக கடிதம் ஒன்றையும் மாணவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

தற்போதய சூழ்நிலையை ஆராயவென நேற்று சகல பீட தலைவர்களும் விசேட கூட்டமொன்றையும் நடத்தினர்.

சில மாணவர்கள் சம்பந்தமாக பல்கலைக்கழக ஒழுக்காற்றுச் சபை மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே தற்போது இந்த மாணவர்கள் ஆட்சேபனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள். கே-வி-சி

## லக்பிம

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. சி. மேலும் தெரிவிக்கையில்: ரெலிகொம்நிறுவனம் சம்பந்தமான ஒரு செய்தியை வெளியிட்டதற்கே சி. ஐ. டி. யினர் இக் காரியாலயத்தை முற்றுகையிட்டனர் என்று லக்பிம நிறுவனத்தை சேர்ந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினமும் 'ஹிரு' பத்திரிகை அலுவலகத்தை சி. ஐ. டி. யினர் பரிசோதனை செய்தார்களென்றும் பி. பி. சி. தெரிவித்துள்ளது. ம-சி

## தமிழர் யாழியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அமரர் இ. சிவானந்தன் நினைவாக "தமிழர் யாழியல்" என்ற ஆய்வு நூலை வெளிட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. சங்கம் நடத்திய விபுலானந்த அடிகளின் நூற்றாண்டு விழாவில் பண்டிதர் க. சச்சிதானந்தன் நிகழ்த்திய ஆய்வுரையே இந்நூலாக வடிவம் பெறுகின்றது. -சி

## அமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவில்லை என்றால் தங்களது பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

தங்களது தொகுதிகளில் அமைச்சர்கள் மூலமாக எந்தப் பணியையும் செய்ய முடியவில்லையெனவும் ஒத்துழைப்புதராத அரச அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியவில்லை எனவும் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் சிறிமாவும் கலந்து கொள்ளவில்லை. சி

# இலங்கை வங்கிக் கட்டிடத்தை பெற்றோல் ஊற்றி எரிக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கை வங்கிக்கட்டிடத்தை பெற்றோல் ஊற்றி எரிக்க முற்பட்டதாக தமிழ் இலிகிதர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாடிக்கட்டிடத்தை எரித்து நாசமாக்கும் நோக்கில் மேற்படி தமிழ் இலிகிதர் பெருமளவு பெற்றோலை எடுத்துச் சென்ற போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு தெற்கிலுள்ள ஐ. தே. க. முக்கியஸ்தர்கள் சிலருடன் நெருங்கிய தொடர்பிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது இவர்பொலிஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

முதலில் இந்த தமிழ் இலிகிதர் இலங்கை வங்கிக்கட்டிடத்தை குண்டு வைத்து தகர்க்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டதாக படையினர் தெரிவித்திருந்தனர். -சி

## புலிகளுடன்

(1ம் பக்க தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;

விடுதலைப் புலிகள் தாங்கள் அனுகூலம் அடையும் விதத்தில் அவ்வப்போது பல தரப்பட்ட பிரேரணைகளை சமர்ப்பித்து வந்துள்ளனர். அவர்கள் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுடன் உண்மையான சமாதானத்திற்காக பேச்சுக்கள் நடாத்துவார்களானால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

'ஐரிஸ்மோனா' கப்பலின் இரு மாலுமிகள் புலிகளால் மட்டுமே கொல்லப்பட்டதாக அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

'ஐரிஸ்மோனா' வில் கண்ணி வெடிகளோ அல்லது வெடிக்க வைக்கும் சாதனங்களோ இல்லை என்ற வகையில் ஐ. சி. ஆர். சி. எழுத்துமூல சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்காவிட்டால் இந்தக் கப்பலை தற்போதைய இடத்திலிருந்து இடம்பெயருவதை அரசு அனுமதிக்காது. அரசின் எச்சரிக்கையை புறக்கணித்து இக் கப்பலை விடுதலைப் புலிகள் இடம் பெயர செய்வார்களானால் அதனை படையினர் நிர்மூலமாக்க தயங்கமாட்டார்கள் எனவும் கூறினார். -சி

## மட்டு நகரில்

(1ம் பக்க தொடர்ச்சி)

கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 7-30 மணிக்கு வெடிக்கும் விதத்தில் இந் நேரக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. எனினும் இப் பார்சல் குண்டு 7 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டு இராணுவத்தினரால் வெடிக்க வைக்கப்பட்டது.

இதையடுத்து மட்டக்களப்பில் பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சி

# இணைந்தபல்கலைகல்லூரிகள் அடுத்த வருடம் மூடப்படும்

(கொழும்பு)

இணைந்த பல்கலைக் கழக கல்லூரி முறை அடுத்த வருடத்திலிருந்து நீக்கப்பட்டு விடுமென கல்வி, உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை தீர்மானிக்கப்படுகிறது. தற்போது உள்ள 11 இணைந்த பல்கலைக் கழக கல்லூரியில் 6 அநுராதபுரத்திலும், சப்பிரகமுவா மாகாணத்திலும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டு பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்படவுள்ளன.

எஞ்சியுள்ள ஐந்தும் சம்பந்தப்பட்ட மாகாணங்களிலுள்ள தேசிய பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. -சி

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஈவினை மதிதி கற்பக விநாயகர் கோவில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கல்விக்கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு யூனியன் கல்லூரியில் நடைபெறும். -சி

0 0 0

(அரியாலை)

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழாவையொட்டி இன்று 7 ம் திகதி வியழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நற்கருணைப்பவனி இடம்பெறவுள்ளது. நாளை 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுப்பலியும் இடம் பெறவுள்ளது. -59

## சனிக்கிழமையிலும் பாடசாலை

(குருநகர்)

இரண்டாம் தவணைப் பரீட்சையை இந்த மாதம் 9 ம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்குமாறு யாழ். நல்லூர் கல்விக் கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் த. துரைசிங்கம் யாழ். நல்லூர் கல்விக் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்குப்பணிப்பு வழங்கி உள்ளனர்.

அத்துடன் போர் நிலமைகள் காரணமாக இழந்த நாட்களை ஈடுசெய்வதற்கு சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை நடாத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். 95-சி

# போலியோ தடுப்பு திட்டம் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் உலக சுகாதார நிறுவனம் 'போலியோ' தடுப்புத் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க உள்ளதாக அதன் இலங்கைப் பிரதிநிதி திரு. பீற்றர் கிஸ்ரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ம் திகதி 'போலியோ' எதிர்ப்புப் பிரசாரத்தை நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ள உலக சுகாதார நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அதற்கிடையில் அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் ஒரு முடிவுக்கு வருமெனத் தாம் நம்புவதாக திரு. பீற்றர் தெரிவித்துள்ளார். சி

ஏருழவு நிறைந்த நாடு
பொருண்மியத்தில் வளர்ந்த நாடு
போர்க்கலையில் சிறந்த நாடு
பிரபாகரன் பிறந்த நாடு


## தொழுவார் வினை தீர்க்கும் மண்டைதீவு சித்தி விநாயகா

தேரேறி வருகின்ற திருவெண்காட்டானே
திரண்டிங்கு கூடி நிற்கும் அடியார் கூட்டம் - எம்
பாரவினைதனைத் தீர்த்து பாவம் போக்கி
பரிவுடனே என்றும் எமைக்காக்க வேண்டி
சோராது விரதமிருந்து சுற்றிவந்தடி அளித்து
சுந்தரமாய் கரம் குவித்து நீர்மல்க உனைவணங்கி
பேரருளை வேண்டுகின்ற கோலம் கண்டீர் - அப்
பேரருளை எமக்கியும் நாள் தான் எப்போ.
அந்தரித்து ராணுவத்தால் அல்லல் உற்றநேரமதில்
அபயமளித் தெங்கள் அச்சம் தீர்த்தவா
சிந்தையுருக உன்பாத மலர் பணிந்தோம்
திருவெண்காட்டானே என்றும் எமைக் காப்பாய் ஐயா

— கவிஞர் க. பிரபலசிங்கம்

திருமுறைக் கழகம், மண்டைதீவு

[இன்று மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேர்த்திருவிழா] [எ 5266]

# தற்காலிக யுத்த நிறுத்தத்தை உலக சுகாதார நிறுவனம் கோருகிறது

(கொழும்பு)

இலங்கையில் உலக சுகாதார நிறுவனம் மிகப் பெரியதொரு சுகாதார நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதால் அக்காலப் பகுதியில் அரசும்-விடுதலைப் புலிகளும் தற்காலிக யுத்த நிறுத்தத்தை மேற்கோள்ள வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் போலியோ தடுப்பு இயக்கம் மற்றும் சுகாதார சேவைகளை நடாத்தும் காலத்தில் யுத்தத்தை தற்காலிகமாகவாவது நிறுத்தி தங்களது நடவடிக்கைக்கு உதவ வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் இருதரப்பையும் கோரியுள்ளது

இது குறித்து உலக சுகாதார நிறுவனம் இரு தரப்பிற்கும் தனித் தனியான வேண்டுகோளை விடுவிக்கவுள்ளதாகவும் இலங்கையிலுள்ள அதன் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சி

# ஐரிஸ்மோனா பயணிகளை உறவினர்கள் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தங்கியிருக்கும் ஐரிஸ் மோனா கப்பல் பயணிகளை நேற்று பெருமளவுமக்கள் சென்று பார்வையிட்டனர்.

யாழ் நகரில் இவர்கள் தங்கியிருக்கும் இடமான ஜோன் பொஸ்கோ பாடசாலைக்குச் சென்று இந்தப் பயணிகளை, தற்போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தங்கியிருக்கும் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சந்தித்து நிலைமைகளை அறிந்து கொண்டனர்.

கப்பல் பயணிகள் தங்கள் அனுபவங்களையும், தீவுப்பகுதி நிலைமையையும் உறவினர்கள் பொதுமக்களுடன் பகிர்ந்து கொண்டனர். 170-சி

# சந்திரிகாவை கொல்ல வந்ததாக 3 தற்கொலைப் படையினர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவை படுகொலை செய்யும் நோக்கில் அவரை பின்தொடர்ந்து வந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த மூவர் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இந்த வருட ஆரம்பம்முதல் இந்த மூவரும் ஜனாதிபதி சந்திரிகாவை நிழல் போல் தொடர்ந்து அவரது நடமாட்டத்தையும் அவர் கலந்து கொள்ளும் வைபவங்கள் பற்றியும் அவரது பாதுகாப்பு வியூகம் தொடர்பாகவும் தகவல்களை சேகரித்து வந்துள்ளனராம்

வடபகுதியிலிருந்து புலிகளின் தலைமைப்பீடத்தால் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த இந்த மூவரும் லொட்ஜ்களில்வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டமூவரில் ஒருவர் விசாரணையின் போது ஓய்வுபெற்ற மலேசிய ஜெனரல் ஒருவரிடம் சிங்கப்பூரில் வைத்து தலைவர்களை கொலை செய்வதுதொடர்பாக விசேட நுட்பங்களை பயின்றதாகக்கூறியுள்ளாராம். -சி

## மாலுமிகளுக்கு ஆபத்தில்லை

(கொழும்பு)

ஐரிஸ்மோனா கப்பலில் உள்ள எட்டு மாலுமிகளும் பாதுகாப்பாக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் உள்ள எட்டு மாலுமிகளில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக முன்னர் வெளிவந்த செய்திகள் தவறு என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது வி-சி

# மகளிர் படையணியே ஐரிஸ்மோனாவை பிடித்தது

(யாழ்ப்பாணம்)

'ஐரிஸ்மோனா' கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்புலிகளின் மகளிர் படைப்பிரிவினராலேயே கைப்பற்றப்பட்டதாக கடற்புலிகளின் மகளிர் படையணியின் விசேட தளபதி கல்யாணி தெரிவித்துள்ளார்.

கடற்படையினரை தம்மை நோக்கி அழைத்து அவர்களைத் தாக்கி அழிப்பதற்காகவே 'ஐரிஸ்மோனா' கப்பலை கைப்பற்றினோம்.

நாம் எதிர்பார்த்ததுபோல் கடற்படையினர் எம்மை நெருங்கி வந்தனர். இரண்டு மோதல்களில் இரண்டு டோராக்கள் அழிக்கப்பட்டன. இத்தாக்குதலை கடற்புலிகளும், கடற்புலிகளின் மகளிர் படையினரும் இணைந்து நடத்தினர் இதில் எமக்கு எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்றும் கல்யாணி கூறியுள்ளார். சி

# எரிந்த நிலையில் டோரா இழுத்து வரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான டோரா படகுகளில் ஒன்று எரிந்த நிலையில் கடற்புலிகளால் கரைப் பகுதிக்கு இழுத்துவரப்பட்டுள்ளது.

எரிந்த நிலையில் கடற்புலிகளின் 'வாட்டர் ஜெற்' படகின்மூலம் இழுத்து வரப்பட்ட இப்பீரங்கிப் படகு கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இக்கப்பல் கடற்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டபோது இதனை ஐரிஸ்மோனா கப்பல் பயணிகளும் பார்த்துக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. சி

## முல்லைத்தீவு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இரு தாக்குதல்களில் இஸ்ரேல் தயாரிப்பான சுப்பர் டோரா பீரங்கிப்படகும் மற்றொரு டோரா பீரங்கிப் படகும கடற்புலிகளால் தகர்த்து மூழ்கடிக்கப்பட்டன.

- ★ 20 எம் எம். பீரங்கிகள் -04
- ★ இதற்கான பெருமளவு ஷெல்கள்
- ★ 50 கலிபர் துப்பாக்கிகள் -04
- ★ பி.கே.எல்.எம். ஜி. - 04
- ★ 303 எல். எம். ஜி. - 01
- ★ ஏ. கே. ரக துப்பாக்கிகள் -05
- ★ நவீன ராடர் சாதனங்கள் என்பன கைப்பற்றப்பட்டன

சி

## மாலுமிகளை

(1ம் பக்க தொடர்ச்சி)

கடற்புலிகளையும் விடுவித்தால் மட்டுமே மேற்படி எட்டுமாலுமிகளும் விடுதலை செய்யப்படுவர் என புலிகள் அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளனர்.

இந்த நிபந்தனை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் நேற்று முன்தினம் பேச்சுக்கள் நடாத்திய விடுதலைப்புலிகள் இதனை அரசுக்கு தெரிவிக்குமாறும் கேட்டுள்ளனர். -சி


நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த

‘வேரும் விழுதுகளும்’

கல்வியியற் கண்காட்சி

இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி

நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது

உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி

எங்களைத் தேடி... செல்வோமா?

செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்

(ஏ-5259)

யாழ். ஸ்ரீதர் அகலத் திரையில்

தினசரி 6-30 காட்சி மட்டும்

கடல் கரும்புலி

மேஜர் நகுலனின்

★ உயிர்ப்பூ ★

இவர் இப்படத்தில் கரும்புலியாக காட்சி அளித்தது போன்றே புல்மோட்டைகடலில் 3-9-95 அன்று அதிவேக பீரங்கிப்படகான டோருவை தாக்கி அழித்து வீரகாவியமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

தினசரி: 2-30, 4-30

சனி ஞாயிறு: 10-30, 2-30, 4-30

நிதர்சனமும்

மட்டு - அம்பாறை சிறப்புப்படையணியும்

இணைந்து வழங்கும்

சி. சேரனின்

உறங்காத கண்மணிகள்

(வேவுப்புலி வீரனின் உண்மைக்கதை - கலர்)

(ஏ-5262)


# தீவுப்பகுதியில் மாலை 6 மணிக்குப் பின் இரு விளக்குடன் செல்ல வேண்டும்

## கப்பல் பயணி தகவல்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளில் ஆறு மணிக்கு மேல் நடமாட முடியாது அப்படி வருத்தம் என்று ஆஸ்பத்திரிக்குப் போவதென்றால் இரவில் இரண்டு லாம்புகள் கொளுத்திக்கொண்டு போகவேண்டும் என்று 'ஐரிஸ்மோனா கப்பலில் பிரயாணம் செய்த அனலைதீவைச் சேர்ந்த வே. நடராசா (70 வயது) தெரிவித்தார்.

இவர் அனலைதீவின் தற்போதைய நிலவரம் பற்றி குறிப்பிடுகையில். ஆங்கு எமக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது. இது போதியதாக இல்லை. மீன் கிலோ 40 ரூபாவிற்கு மேல் விற்பனையாகிறது என்றார்

நயினாதீவைச் சேர்ந்த க. நடராசா (47 வயது) அங்குள்ள நிலைமை பற்றி விபரிக்கையில்: உணவு விடயத்தில் பிரச்னைதான் மரக்கறி சாப்பிடுவது குறைவு வருடத்தில் மூன்று மாதத்திற்கு மரக்கறி சாப்பிடுவோம். மிகுதி ஒன்பது மாதமும் மரக்கறி என்ற நாமமே கிடையாது. நயினாதீவில் சந்தை வசதிகள் இல்லை தோட்டங்களில் விளைவிக்கும் பொருட்களை திருகோணமலைக்கு கொண்டு சென்று விற்கின்றோம்.

காரைநகரைச் சேர்ந்த பா. பேரின்பவள்ளி குறிப்பிடுகையில்; கணவருக்கு ஒப்பரேசன் செய்ய வேண்டியதினால் கொழும்புக்கு போயிருந்தோம் காரைநகரில் எமக்கு நிவாரணம் தரப்படுகிறது ஆனால் அது போதாது திருகோணமலையிருந்து வியாபாரிகள் பொருட்கள் கொண்டு வந்து விற்கின்றார்கள் அவர்களிடம் வேண்டி ஒரு மாதிரி வாழ்க்கையை சமாளிக்கின்றோம்

இங்கு ஆறு மணிச் சட்டம் இருக்கின்றது. அலுவல் காரணமாக எங்கேயும் போவதாக இருந்தால் கடற்படையினரிடம் அறிவித்துத்தான் போகவேண்டும். ம-சி



'ஐரிஸ்மோனா' பயணிகளை சந்திப்பதற்காக ஜோன் பொஸ்கோ பாடசாலை முன் கூடியிருந்த உறவினர்களையும், பயணிகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் உரையாடுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: தேவா

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.